1. புகைப்படக் கலையை நோக்கி உங்களை ஈர்த்த ஆரம்ப கால நினைவு என்ன என கூற முடியுமா?

என்னுடைய பள்ளி பிராயத்தில் நான் கதைகள் எழுதியிருக்கிறேன். கதைகள் எழுதத் தொடங்கியதை என் புகைப்படக் கலையின் ஆரம்ப கால நினைவாக குறிப்பிடலாம் என நினைக்கிறேன். பிறகு அது திரைப்படம் இயக்கும் ஆசையாக வளர்ந்தது. ஸ்பைடர் மேன் போன்ற படம் எடுக்க ஆசைப்பட்டேன். சே குவேராவின் புத்தகத்தில் வந்ததை போல நான் படம்பிடிக்க ஒரு புகைப்படக் கருவியை வாங்கினேன். ஒரு பழைய கேமராவை சினிமா எடுக்கும் ஆர்வத்துடன் வாங்கிய நினைவுகள் பசுமையாக இருக்கின்றன. பொறியியல் படித்த காலத்தில் என் தாயின் அன்றாட நடவடிக்கைகளை ஆவணப்படுத்தியது புகைப்படக் கலையை நோக்கி நான் வர உதவியது. இன்று நான் இருக்கும் கட்டத்துடன் என்னை இணைத்த ஆரம்ப கால நிகழ்வுகள் இவை. தொழில் ரீயிலான புகைப்படக் கலை என்பது ஒரு மரண வீட்டில்தான் தொடங்கியது. கக்கூஸ் என்கிற படத்தில் ஒளிப்பதிவு செய்வதற்காக திவ்யபாரதியிடம் நண்பர் குணா என்னை அறிமுகம் செய்து வைத்தார். என்னுடைய முதல் படப்பதிவே ஒரு தூய்மைப் பணியாளரின் இறுதி அஞ்சலிதான். தூய்மைப் பணியாளர் என்கிற வார்த்தைகளையே நான் அப்போதுதான் கேள்விப்படுகிறேன். அடுத்த ஒன்றரை வருடங்களும் இறந்துபோன தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தின் துயரம் பற்றி மட்டும்தான் புகைப்படங்களும் காணொளிகளும் எடுத்தேன். வெளியில் சொல்லப்படாத, சட்டவிரோதமான ஆனால் தொடர்ச்சியாக நிகழ்ந்து கொண்டிருந்த இத்தகைய மரணங்கள் அவற்றை ஆவணப்படுத்த வேண்டிய அவசியத்தை எனக்குள் ஏற்படுத்தியது. அவற்றை இச்சமூகத்துக்கு எடுத்துக் காட்ட வேண்டுமென என்னை உந்தித் தள்ளியது. அந்த படப்படிப்பு சமயத்தில்தான் அதுவரை எனக்கு நேர்ந்து கொண்டிருந்த சாதிய ஒடுக்குமுறையையே நான் உணரத் தொடங்கினேன். தகவல் தொழில்நுட்ப கல்வியில் இருந்து நான் வெளியேற்றப்பட்டதும் முடிவெட்டுவதற்கு போர்த்தப்படும் துணி எனக்கு மட்டும் போட மறுக்கப்பட்டதும் இன்னும் பல விஷயங்களுக்குமான காரணத்தை நான் புரிந்து கொண்டேன். இச்சம்பவங்களுக்கான காரணம் ஒரு விடுகதைக்கான விடையை போல பல ஆண்டுகளுக்கு பின் எனக்குக் கிடைத்தது. எல்லா விஷயங்களுக்கான அர்த்தமும் புரிந்தது. புகைப்படக் கலையை தொடங்கிய நாட்களில் நான் பல வரலாற்று புகைப்படங்களை அவதானித்தேன். அவை சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்களையும் கவனித்தேன். உதாரணமாக வியட்நாம் போரில் குண்டு வீசப்படும்போது ஓடி வந்த பெண்ணின் புகைப்படம். நிர்வாணப்

பெண்ணின் அழுகை பல இதயங்களை வென்று போரையே நிறுத்தும் சூழலை உருவாக்கியது. அப்போதுதான் 'புகைப்படக் கலையின் வலிமை' எனக்கு புரிந்தது.

2. புகைப்படக் கலையை முறையாக நீங்கள் கல்லூரி அல்லது பல்கலைக்கழகம் எதிலும் பயின்றீர்களா? ஆம் எனில், உங்களின் அனுபவம் என்ன? இல்லையெனில், இத்துறையை பற்றியும் நுட்பம், மொழி மற்றும் அழகியல் பற்றியும் உங்களுக்கு நீங்களே கற்பித்துக் கொண்டீர்களா?

புகைப்பட பணிகள் எடுப்பதற்கு முன் வரை கிடையாது. ஆரம்ப நாட்களில் ஆட்டோவில் நான் படம் பிடிப்பேன். அபெர்ச்சர், எக்ஸ்போஷர் எல்லாம் எனக்கு அப்போது தெரியாது. பிறகுதான் அவற்றை கற்றுக் கொண்டேன். நிக்கான் 5100தான் என்னுடைய முதல் புகைப்படக் கருவி. ஆரம்பத்தில் என் புரிதலுக்கு ஏற்ப படங்கள் எடுத்து மாற்றங்கள் செய்தேன். நிறைய பணம் செலவாகும் இடத்தில் அச்சிட்டேன். பிறகு பளபளப்பாக்கி, சட்டகம் அமைத்து நானே தயார் செய்து கொள்வேன். என்னை சரியான திசையில் செலுத்துவதற்கென யாரும் இருக்கவில்லை. எல்லாவற்றையும் நானே தேடி கற்றுக் கொண்டேன். பிறகு புகைப்படங்களை வெவ்வேறு சட்டகங்களில் வைத்து என் வீட்டில் தொங்க விட்டு பார்த்து ரசிப்பேன். இப்படிதான் தொடக்கத்தில் இருந்தது. 2019ம் ஆண்டில் நான் அமீர் அண்ணனை சந்தித்தேன். எனக்கு பயிற்சி கொடுக்கவென ஒரு புகைப்படக் கலைஞரை நான் சந்தித்தது அப்போதுதான். புகைப்பட எடிட் செயலியான லைட்ரூம் அப்போதுதான் எனக்கு அறிமுகமானது. எடிட் செய்யும் முறையையும் முதன்முறையாக அப்போதுதான் பார்த்தேன். இதற்கு பிறகுதான் நேஷனல் ஜியோக்ரபியின் புகைப்படக்கலைக்கான பயிற்சி பட்டறையில் நான் சேர்ந்தேன். இந்த பட்டறையில்தான் புகழ்பெற்ற 'ரீட்டா அக்கா' கட்டுரை உருவானது. எடிட்டிங் முறை பற்றியும் லைட்ரூம் பற்றியும் இங்குதான் தெரிந்துகொண்டேன். இத்தகைய பட்டறைகள், மானியங்கள், புகைப்பட விழாக்கள் பற்றியும் அப்போதுதான் தெரிந்து கொண்டேன். அபெர்ச்சர், ஐஎஸ்ஓ முதலிய நுட்பங்களை பட்டறையில் கவனிக்கத் தொடங்கினேன். அவற்றை வெவ்வேறு புகைப்படங்களில் பயன்படுத்தி பார்க்கத் தொடங்கினேன். பல வல்லுநர்கள் பட்டறையில் எனக்கு உதவினர். நான் எடுத்த புகைப்படத்துடன் வெளியான ரீட்டா அக்கா கட்டுரை நேஷனல் ஜியோக்ரபி இணையதளத்தில் வெளியானது. என்னுடைய வேலைவாய்ப்பை அது உயர்த்தி கொடுத்தது. பிறகு நேர்ந்த புகைப்படக் கலைஞர் எழிலனுடனான பயணமும் பல தொழில்நுட்பங்களை பயன்படுத்தும் வாய்ப்புகளை அளித்தது. குறைந்த ஒளியில் நான் எடுக்கும் புகைப்படங்களுக்கு ரீட்டா அக்கா புகைப்படங்கள் ஓர் உதாரணம். அந்த குறைவான வெளிச்சம் மட்டும்தான் அவரின்

வீட்டில் இருந்தது. அவரின் வீட்டில் மின்சாரம் இல்லை. அதை அப்படியே காட்சிப்படுத்த வேண்டுமென விரும்பினேன். வாழ்க்கையை அப்படியே எடுப்பதைதான் நான் விரும்புவேன். அங்கு இல்லாத மகோன்னதத்தை புகைப்படத்தில் கொண்டு வருவதில் எனக்கு விருப்பம் இருந்ததில்லை. ஐஎஸ்ஓ, ஷட்டர் வேகம் முதலியவற்றை குறைத்து வைக்கும்போது வெளிச்சத்தை கட்டுப்படுத்த முடியுமென நினைத்தேன். வெளிச்சத்தை அவதானிக்கத் தொடங்கினேன். சினிமா ஒளிப்பதிவுக்கான பொறுமையை டிஜிட்டலில் கொண்டு வரத் தொடங்கினேன். எடுத்த புகைப்படங்களை எழிலன் அண்ணனுடன் மீண்டும் மீண்டும் பார்த்து விவாதித்து புகைப்பட மாந்தர்களின் விவரணைகளை பற்றி உரையாடிக் கொண்டே இருந்தேன். எனக்கும் நான் புகைப்படம் எடுத்த மக்களுக்கும் இருக்கும் மனநிலையை ஆராய்ந்தேன். அவர்களுடன் தொடர்ந்து உரையாட அவர்களோடே பயணிப்பேன். ஒருவரையொருவர் பற்றி தெரிந்து கொள்வோம். இத்தகைய அனுபவங்கள்தாம் எனக்குள் கற்றலை நிகழ்த்தி புகைப்படக் கலையில் தேர்ச்சியுற வைத்தன. எல்லாமே கள அனுபவத்தில் விளைந்தவை.

3. புகைப்படக் கலையை கற்பது முக்கியம் என நினைக்கிறீர்களா?

புகைப்படக் கலையை கற்பது முக்கியமென நினைக்கிறேன். என்னுடைய விஷயத்தில் நான் மக்களுடன் உரையாடியிருக்கிறேன். பயணித்திருக்கிறேன். மக்களுடனான பிணைப்பு மட்டும்தான் என்னுடைய புகைப்படக் கலைக்கு உதவும் என நம்பினேன். மக்களுடன் உரையாடிய அதே நேரத்தில் புகைப்படக் கலைஞர்களுடன் பேசியதில்லை. ஒரு புகைப்படத்தை எப்படி வடிவமைப்பது என்றும் எங்கு எடுக்க வேண்டும் என்பதும் பிற தொடர்புகளும் எனக்கு தெரிந்திருக்கவில்லை. படிப்பதற்கான வாய்ப்பு இருந்திருந்தால் இம்முறைகளை பற்றி மிக சீக்கிரமாகவே தெரிந்து கொண்டிருப்பேன் என உறுதியாக நம்புகிறேன். எனவே புகைப்படக் கலைஞராக விரும்புபவர்கள் ஒரு நிறுவனத்தில் இணைந்து படிப்பது அவசியமென நினைக்கிறேன். புகைப்படக் கலைக்கான முழுமையான கற்றலுக்கு வகுப்பறை மற்றும் கள அனுபவம் இரண்டுமே தேவை. மக்களுடன் இணைந்து அவர்களிடமிருந்து கற்பது தொழில்நுட்பங்களை கற்பதை போல் அவசியமான விஷயம். இரண்டுமே கற்றலுக்கான இருவகை பள்ளிகள். புகைப்படக் கலைஞராக விரும்புபவருக்கு இரண்டுமே தேவை. நேஷனல் ஜியோக்ர஻பி பயிற்சிப் பட்டறையில்தான் பல புகைப்படக் கலைஞர்களின் அறிமுகம் எனக்கு கிடைத்தது. அவர்கள் என்னுடைய புகைப்படங்களை புகைப்பட விழாவுக்கு அனுப்ப பரிந்துரைத்தனர். என் புகைப்படங்களை அவர்களுக்கு அனுப்பினேன். மானியங்களை

பற்றி தெரிய வந்தது. புகைப்படக் கலையுடன் சேர்த்து எழுதவும் தொடங்கினேன். இது எனக்கு பல தொடர்புகளை கொண்டு வந்து சேர்த்தது. புகைப்படக் கலையை பொறுத்தவரை தொடர்புகளை உருவாக்குதல் என்பது மிகவும் முக்கியம். ஒரு கல்வி நிறுவனம் இதற்கான வாய்ப்பை உருவாக்கி உங்களின் புகைப்படங்களை பல இடங்களுக்கு கொண்டு சென்று சேர்க்கிறது. என்னுடைய புகைப்படக் கலை வாழ்க்கையின் தொடக்கத்தில் இத்தகைய ஓர் ஆதரவு எனக்கு கிடைக்கவில்லை.

4. இளம் இந்திய புகைப்படக் கலை ஆர்வலர்களுக்கு என ஒரு புகைப்பட கற்றல் திட்டத்தை நீங்கள் வடிவமைத்தால் அது என்னவாக இருக்கும்?

புகைப்படக் கலையை தொடங்குபவர்களிடம் ஒரு முக்கியமான விஷயத்தை நான் பார்க்கிறேன். புகைப்படக் கலை என்றால் நேராக குப்பங்களுக்கு சென்று அங்கிருக்கும் ஏழை மக்களின் கஷ்டங்களை எடுப்பதுதான் என நினைக்கிறார்கள். அந்த கஷ்டங்கள் நேர்கிற வாழ்க்கை சம்பவங்களை அவர்கள் தவற விடுகிறார்கள். வலியை படம்பிடிப்பது என்பது வழக்கமான ஒரு விஷயமாகி விட்டது. சொந்த வாழ்க்கையையும் யதார்த்தத்தையும் மறந்து விடுகிறார்கள். புகைப்படம் என்பதை எங்கிருந்தும் எடுக்க முடியுமென நான் நம்புகிறேன். மக்கள் என்னவாக இருக்கிறார்களோ அதை கற்பதுதான் உண்மையான புகைப்படக் கலையாக இருக்கும். அவர்களின் வாழ்க்கையுடன் புகைப்படக் கலை ஒன்றுபட வேண்டும். ஏனெனில் மக்கள் பொருட்கள் அல்ல. மக்களை படம்பிடிக்கும் புகைப்படத்தில் வாழ்க்கை இருக்கிறது. உயிர்ப்புடன் தாக்கத்தை ஏற்படுத்தும் விஷயம் அது. எனவே பொறுப்பின்றி மக்களை காட்டுதல் கூடாது. எதை காட்டுகிறோம் என்பதில் நமக்கு ஒரு பொறுப்பு இருக்கிறது. குப்பத்து மக்களை தவறாக சித்தரிக்கும் போக்கில் நாமும் ஒன்றிவிடக் கூடாது. அம்மக்களை கற்று அவர்களின் வாழ்க்கை புரிந்து அவர்களை போல் வாழும்போதுதான் நம்முடைய படைப்புகளில் அந்த வாழ்க்கை பிரதிபலிக்கும். ஒரு புகைப்படக் கலைஞர் மக்களை சுரண்டாமல் அவர்களின் நம்பிக்கை பெறும் வகையிலான முயற்சிகளை நாம் உருவாக்க வேண்டும். அந்த நம்பிக்கைதான் புகைப்படக் கலைஞருக்கு முதன்மையான விஷயம். இந்த தன்மைகள் யாவும் பட்டப்படிப்பு, பட்டறை முதலிய எல்லா வழிகளிலும் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டுமென நினைக்கிறேன். இது புகைப்படக் கலைஞர்களை மக்களுடன் இணைக்க உதவும். புகைப்படக் கலைக்கென ஒரு மொழி அல்லது ஒரு முறை இருப்பதாக நான் சொல்வதை பலர் மறுக்கக் கூடும். ஆனால் அங்குதான் நான் முரண்படுகிறேன். புகைப்படக் கலையில் மக்களின் மொழிகள் பல இருப்பதாக நம்புகிறேன். அவர்களின் வாழ்க்கையை பிரதிபலித்து சமூக மாற்றத்தை விளைவிக்கும் மொழிகள் அவை.

5. உங்களை புகைப்படக் கலை நோக்கி ஈர்த்த/ஈர்க்கும் விஷயம் எது அல்லது நபர் யார்?

நான் பயணித்த மக்களிடமிருந்துதான் எனக்கான ஈர்ப்பு கிடைக்கிறது. என்னுடைய முதல் ஈர்ப்பு தாயிடமிருந்து தொடங்கியது. என் தாயின் அன்றாட வேலையை ஆவணப்படுத்தி பல விஷயங்கள் நான் கற்றுக் கொண்டேன். அது எனக்கு சுலபமாக இருந்தது. என் தாய்க்கு புகைப்படம் எடுப்பது பிடிக்காது எனினும் அவர் எப்போதும் மறுப்பு தெரிவித்ததில்லை. பிறகு நுணுக்கமான விஷயங்களை எப்படி கவனிப்பது என்பதை குணா சாரிடமிருந்து கற்றுக் கொண்டேன். புகைப்படம் எடுக்கையில் பல விஷயங்களை ஏன் புறக்கணிக்கக் கூடாது என்பதை அவரிடமிருந்து கற்றேன். என்னுடைய வேலைக்கான தேவையை நான் புரிந்து கொள்ள எழிலன் சார் உதவினார். அச்சிட்ட புகைப்படங்களை மக்களிடம் எடுத்து சென்று காட்டி அவர்களின் கணிப்பை தெரிந்து கொள்ளுமாறு அவர்தான் எனக்கு சொன்னார். அது எனக்குள் ஓர் ஒழுங்கை உருவாக்கியது. அதற்கு பிறகு அமீர் அண்ணா, சுதாகர் சார், சாய்நாத் சார் ஆகியோர்தான் தொடர்ந்து எனக்கு கற்றுக் கொடுத்து இந்த பயணத்தில் ஈர்த்துக் கொண்டிருக்கின்றனர்.

6. உங்களின் படைப்புகளில் தாக்கம் செலுத்தும் புத்தகம், கண்காட்சி அல்லது படைப்பு ஏதேனும் இருக்கிறதா?

ஏற்கனவே சொன்னதுபோல பிறரின் புத்தகங்களையும் படைப்புகளையும் நான் பார்த்திருக்கிறேன். என் படைப்புகளை கண்காட்சியாக்கி நான் சேகரித்த அனுபவங்களும் தொடர்ச்சியாக மக்களுடன் நிகழ்த்தும் உரையாடலும்தான் என்னுடைய வாழ்க்கை அல்லது படைப்புகளில் தாக்கம் செலுத்துகின்றன. என் படைப்புகளின் கண்காட்சி முடிந்த பிறகுதான் சுதாகர் சாரின் படைப்புகள் பற்றியும் அமிதாவின் படைப்புகள் பற்றியும் தெரிந்து கொண்டேன். இப்போது நான் செபாஸ்டின் சார், சுதாகர் சார், செல்வா அண்ணா ஆகியோரின் படைப்புகளை தொடர்ந்து கொண்டிருக்கிறேன். புத்தகங்கள் வாசிக்கத் தொடங்கி இருக்கிறேன். செல்வா அண்ணாதான் படைப்புகளில் இருக்க வேண்டிய நேர்மையின் முக்கியத்துவத்தை எனக்கு கற்றுக் கொடுத்தார். எல்லாவற்றையும் தாண்டி அது விஞ்சி எப்படி நிற்கும் என்பதையும் புரிய வைத்தார். இவர்கள்தான் எனக்காக இருந்து எனக்காக உதவியவர்கள்.

7. உங்களின் தற்போதை வேலைக்கான உள்ளடக்கத்தை நோக்கி எது உங்களை ஈர்க்கிறது அல்லது ஈர்த்தது?

கக்கூஸ் ஆவணப்படத்திற்கான எனது ஒளிப்பதிவு வேலையின் போதுதான் தூய்மைப் பணியில் உள்ள சுரண்டல் மற்றும் அதில் நேரும் மரணங்கள் பற்றி தெரிய வந்தது. அப்போதிருந்து, தூய்மைப்பணியின் பல்வேறு சமூக பண்புகளை ஆவணப்படுத்தும் பணியில் நான் தொடர்ந்து பணியாற்றி வருகிறேன். இது எனது தினசரி வேலை. முன்பு குறிப்பிட்டது போல், எனது முதல் நாள் படப்பிடிப்பு ஒரு தூய்மைப் பணியாளரின் மரணத்தை பற்றியதாகும். படப்பிடிப்பின் போது நான் அங்குள்ள மக்களின் வாழ்க்கை நிலையை கவனிக்க ஆரம்பித்தேன். இரண்டு ஆண்களின் இறப்புகளை படம் பிடித்திருந்தோம். அவர்களில் ஒருவருக்கு வாழ்விட வசதி இல்லை. அவர்கள் ஒரு கழிப்பறையை இடித்து தங்கள் வீட்டை கட்டியிருந்தார்கள். மற்றவர் ஒரு பறை இசைக்குழுவை நடத்தி வந்தார். அக்குழுவின் இருப்பு தற்போது கேள்விக்குறியாகி உள்ளது. அந்த தருணம் எனக்கு தெளிவாக நினைவிருக்கிறது. நான் சொர்க்கத்திலிருந்து நரகத்திற்கு தள்ளப்பட்டது போல் உணர்ந்தேன். கழிப்பறை வசதி இல்லை. குடிநீரில் கழிவுநீர் கலந்திருக்கிறது. அங்கு வசிக்கும் குழந்தைகளுக்கு அடிப்படை வசதிகள் இல்லை. சாதி பாகுபாடு காரணமாக கல்வி தடைபட்டிருக்கிறது. இன்னும் பல மோசமான நிலைமைகள் அங்கு இருக்கின்றன. ஆவணப்படத்திற்காக ஒன்றரை வருடங்கள் படப்பிடிப்பு நடத்தினோம். அந்த காலகட்டத்தில் நான் பலரை சந்தித்தேன். நான் ஆவணப்படத்திற்காக காணொளிகளை படமாக்கியபோது, பிற நிகழ்வுகளின் புகைப்படங்களையும் எடுத்தேன். சாதியின் பங்கு, தூய்மைப்பணி இருப்பதற்கு பின்னுள்ள அரசியல் ஆகியவற்றைப் புரிந்துகொள்ள ஆவணப்படத்தின் திரைக்கதை எனக்கு உதவியது. வேலை பார்க்கையில் ஒரு தூய்மைப் பணியாளர் இறந்து போனால், அதற்கு பிறகு அவரது குடும்பத்திற்கு என்ன நடக்கும் என்ற கேள்வி என்னைத் தொந்தரவு செய்தது. எனவே படப்பிடிப்புக்குப் பிறகு நான் தூய்மைப் பணியாளர்கள் பற்றி மேலும் புகைப்படங்கள் எடுக்க ஆரம்பித்தேன். பெரும் பணம் கறக்கும் கடைகளில் புகைப்படங்களை அச்சிட்டு பள்ளிகளுக்கு எடுத்துச் செல்வேன். தூய்மைப் பணியாளர்கள் பற்றி அவர்களுக்கு என்ன தெரியும் என பேசுவேன். அவர்களின் வளாகத்தில் உள்ள தூய்மைப் பணியாளர்களைப் பற்றி அவர்களுக்குத் தெரியுமா என கேட்பேன். தூய்மைப் பணியாளர்களுடன் தொடர்பு கொள்ளக்கூடாது என்றும் அல்லது அவர்களிடமிருந்து தூரமாக எப்படி இருக்க வேண்டும் என்றும் அவர்களுக்கு கற்பிக்கப்படுபவை பற்றி பேச்சினூடாக தெரிந்து கொள்வேன். இந்த உரையாடல்கள் குழந்தைகளிடம் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. அவர்கள் எப்படி சிந்திக்க வேண்டும் என்பதையும் அவர்களின் கண்ணோட்டம்

எவ்வளவு வித்தியாசமாக இருக்க வேண்டும் என்பதையும் விவாதிக்கும் ஒரு வெளியை அந்த உரையாடல்கள் உருவாக்கியது.

தூய்மைப்பணி ஆவணப்படுத்துதலில் மிக முக்கியமான மைல் கல்லாக லலித் கலா அகாடமியில் நடைபெற்ற எனது முதல் கண்காட்சி அமைந்தது. நான் லயோலா கல்லூரியில் எனது புகைப்படங்களை காட்சிப்படுத்த முயற்சித்தேன். டிக்கெட் அச்சிடுவதற்கான நிதி திரட்டும் வாய்ப்பை கண்டுபிடிக்க முயன்றேன். என் நலவிரும்பியான ரேவதி, இயக்குனர் பா.ரஞ்சித்தை அணுகினார். ரஞ்சித் அண்ணா எனது வேலையை பற்றி விசாரித்துவிட்டு அவரை சந்திப்பதற்கு வரச் சொன்னார். நான் அவரைச் சந்திக்க என் படைப்புகளுடன் சென்றேன். அவர் புகைப்படங்களைப் பார்த்துவிட்டு ஒப்புக் கொண்டார். லலித் கலா அகாடமியை முன்பதிவு செய்தார். புகைப்படங்களை அச்சிட எனக்கு பணம் கொடுத்தார்கள். நாங்கள் நிகழ்ச்சியை நடத்தினோம். லலித் கலா அகாடமிக்கு அத்தகைய கண்காட்சி அதுவே முதல் முறை. ரஞ்சித் அண்ணாவின் நீலம் ஒருங்கிணைப்பு பணிகளில் ஈடுபட்டதால் பெருமளவுக்கு பார்வையாளர்கள் இருந்தனர். படைப்புகளையும், அதன் நுட்பங்களையும் அவை ஏற்படுத்திய தாக்கத்தையும் விவரித்து பலர் பாராட்டினர். புகைப்படங்களைப் பார்க்க தினமும் கண்காட்சிக்கு வருகை தரும் ஒரு பையனைப் பார்த்தேன். தூய்மை பணியாளர்களின் அவலநிலையுடன் மக்கள் தங்களை தொடர்பு கொண்ட விதத்தையும் அதிலுள்ள சுரண்டலை அவர்கள் புரிந்துகொண்ட விதத்தையும் பார்த்தேன். அந்தக் கண்காட்சி பற்றி கவிதா முரளிதரன் ஒரு கட்டுரையை எழுதியபோது அது என்னை சாய்நாத் மற்றும் பாரியுடன் இணைத்தது. பல்வேறு நிலைகளில் அது ஒரு மைல் கல் நிகழ்வாக அமைந்தது.

ஆனால் தொடர்ச்சியாக புகைப்படங்களை பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு எடுத்துச் சென்ற பிறகு, அது போதாது அல்லது தீர்வாக மாறாது என்பதை நான் உணர்ந்தேன். இதற்கு ஒரு முடிவைக் கொண்டு வருவது சில நாட்களில் நடந்துவிடாது என்பதை நான் உணர்ந்தேன். ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் மீது இத்தகைய ஒடுக்குமுறை இருப்பதை கூட அறியாத ஒரு பெரும் சமூகம் இருக்கிறது. அவர்களுக்குள் அந்த புரிதல் ஏற்பட ஒரு சமூகத் தடையும் உள்ளது. எனவே நான் இதை எனது முழு நேர வேலையாக எடுத்துக்கொண்டேன். எனது மற்ற எல்லா வேலைகளுக்கும் இடையில், கொடுக்கப்பட்ட எல்லா வாய்ப்புகளிலும் நான் அவர்களின் அவல நிலையை ஆவணப்படுத்திக் கொண்டே இருப்பேன். திருமண புகைப்படங்கள் எடுக்கும் வேலையிருந்த சூழ்நிலைகள் இருந்தன. ஆனால் வழியில் ஒரு தூய்மைப் பணியாளரை பார்த்தேன். அதைச் படம்பிடிக்கச் சென்று மற்ற வேலைகளுக்கு

தாமதமாக சென்றேன். இந்த வேலைக்குதான் முன்னுரிமை அளிக்கிறேன். இந்த புகைப்படங்களை வெவ்வேறு வெளிகள், கண்காட்சிகள், பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றுக்கு எடுத்துச் சென்று தூய்மைப் பணியாளர் பற்றிய உரையாடலை உருவாக்க முயற்சி செய்கிறேன். இந்த சமத்துவமின்மையும் அடக்குமுறையும்தான் என்னை இந்த வேலைக்கு ஈர்த்தது. அது என்னை இன்னும் வேலை செய்ய வைக்கிறது. என்னை இயக்கும் உள்ளுணர்வு இதுதான். எல்லாவற்றுக்கும் மேலாக இதுவே என்னை தினமும் தொந்தரவு செய்யும் விஷயம். அதனால்தான் இது என்னுடைய முழு நேர வேலை என சொல்கிறேன். சுதாகர் ஐயாவின் வார்த்தைகளில் சொல்வதெனில், "தடுப்புகளை உடைத்து சமூக விழிப்புணர்வை ஏற்படுத்த தொடர்ந்து வேலை" செய்து கொண்டிருக்கிறேன்.

8. பல பணிகளை ஒரே நேரத்தில் செய்கிறீர்களா அல்லது ஒரு நேரத்தில் ஒரு பணியில் மட்டும் கவனம் செலுத்துகிறீர்களா?

நான் ஒரே நேரத்தில் பல திட்டங்களில் கவனம் செலுத்துகிறேன். பல சமூக நிகழ்வுகள் தொடர்ந்து நிகழ்கின்றன. அவற்றில் வேலை செய்ய நான் கடமைப்பட்டிருக்கிறேன். சமீபத்திய சாதி வன்முறை சம்பவங்கள், தூய்மைப் பணியாளர்கள் மரணம், மக்களை அப்புறப்படுத்துவது அல்லது குடியுரிமை திருத்தச் சட்டத்துக்கு எதிரான போராட்டங்கள் போன்றவை தொடர்ந்து இயங்க வைக்கின்றன. இந்த சிக்கல்கள் நடக்கும்போது நான் அவற்றை ஆவணப்படுத்திக்கொண்டே இருக்கிறேன். அதே நேரத்தில் நான் பாரி இணையதளத்துக்கும் பல்வேறு வாழ்க்கைக் கட்டுரைகளை எழுதி வருகிறேன். ஆனால் நான் முன்பு கூறியது போல் தூய்மைப் பணியாளர் வாழ்க்கையை ஆவணப்படுத்துவது தினசரி வேலை. அதை படம்பிடிக்க என்னிடம் எப்போதும் புகைப்படக் கருவி இருக்கும். நான் மற்ற பணிகளையும் அதே நேரத்தில் செய்து கொள்கிறேன். பிற வேலைகளுக்கென பயணம் செய்யும் போது தூய்மைப் பணியாளர் தொடர்பான சம்பவம் ஒன்று நடந்தால், திட்டங்களை மாற்றிவிட்டு அதற்கு முன்னுரிமை கொடுப்பேன். குறிப்பாக ஒரு நீண்ட பணியில் கவனம் செலுத்த விரும்புகிறேன். இளைஞனாக இருக்கிறேன். புகைப்படக் கலைஞர் என்கிற இந்த அடையாளத்துடன் மாற்றங்களைக் கொண்டுவரும் பொறுப்போடு பல்வேறு பணிகளை செய்ய முடியும் என நினைக்கிறேன்.

9. நீங்கள் எவ்வாறு வெற்றியை அளவிடுகிறீர்கள்?

எனது படைப்பின் வெற்றியை மக்கள் எவ்வாறு பிரதிபலிக்கிறார்கள் மற்றும் அவர்கள் எனது படைப்பை எவ்வாறு ஏற்கிறார்கள் ஆகியவற்றை வைத்துதான்

வெற்றியை அளவிடுகிறேன். எனது வேலைக்கு மக்கள்தான் நீதிபதிகள். நான் எல்லா வேலைகளையும் செய்துவிட்டு மக்கள் முன் அவற்றை வைக்கிறேன். அவர்கள்தான் என் வேலைக்கான தீர்ப்பை எழுதுகிறார்கள். அவர்கள் என் வேலையுடன் எப்படி தொடர்பு கொள்கிறார்கள் என்பதை வைத்து நான் என் வெற்றியை அளவிடுகிறேன். உதாரணமாக ஒருமுறை நான் பள்ளி மாணவர்களிடம் தூய்மை பணியாளர்களின் படங்களை வைத்து ஓர் அமர்வை நடத்தியபோது, தூய்மைப் பணிக்கு பின் இருக்கும் அடக்குமுறையை புரிந்து கொண்டு அவர்கள் அழத் தொடங்கி விட்டனர். நான் உரையாடத் தொடங்கினேன். வளாகத்திலுள்ள சுத்தம் செய்யும் அக்கா பற்றியும் அவர் இருக்கும் வேலை பற்றியும் என்ன தெரியும் என்றும் அவர்களிடம் கேட்டேன். சிறுமிகள் சென்று சுத்தம் செய்யும் அக்காவிடம் பேசினார்கள். பயன்படுத்தப்பட்ட மாதவிடாய் நாப்கின்களை எடுக்க வேண்டிய அவரின் நிலையை பற்றி அக்கா விளக்கினார். சிறுமிகள் அவரிடம் மன்னிப்பு கேட்டனர். இனிமேல் அவ்வாறு செய்ய மாட்டோமென உறுதியளித்தனர். இந்த சம்பவத்தைக் கொண்டு எனது வெற்றியை அளவிடுகிறேன். லலித் கலா அகாடமி கண்காட்சியின் போது இயக்குனர் ரஞ்சித் அண்ணா எனது பணியை பாராட்டி கண்ணீர் விட்டார். கண்காட்சியைப் பார்த்து பலர் அழுதனர். யாரென தெரியாத ஒருவர் என் இரு கைகளையும் பிடித்துக்கொண்டு, இந்த சொல்லப்படாத கதைகளை நான் எப்படி படமாக்கினேன் என்று கேட்டார். நான் முன்பு குறிப்பிட்ட சிறுவன் ஒவ்வொரு நாளும் வருகை தந்தார். எனது வேலையைப் பார்த்த பிறகு மக்கள் வெளிப்படுத்தும் இந்த வகையான உணர்ச்சிகளால் எனது வேலையின் வெற்றியை அளவிடுகிறேன். இந்த உரையாடல்களை மக்களிடையே துவக்கி அவர்களின் கல்வியில் கூட கிடைக்கும் விஷயங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கம். இதுபோன்ற உரையாடல்களை நிகழ்த்துவதே எனது வெற்றிக்கான அளவுகோல்கள்.

10. உங்களின் படைப்பாற்றல் எங்கேனும் தடைபட்டிருக்கிறதா? அத்தடையை கடப்பதில் உங்களுக்கு எது உதவியாக இருக்கிறது?

தடை ஏற்பட்டு சிக்கிக் கொள்வதற்கான நேரம் என்னிடம் இல்லை என்று நினைக்கிறேன். நிறைய வேலை இருக்கிறது. வேலை செய்ய வேண்டிய பிரச்சினைகளும் நிறைய உள்ளன. மாறாக, எனக்கு வேலை செய்ய போதுமான நேரம் இல்லை. நான் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக தூய்மை பணியாளர் பிரச்சினையில் வேலை செய்து வருகிறேன். ஆனால் நாம் என்ன மாற்றத்தைக் கண்டோம்? ஏன் நாம் இன்னும் மலக்குழி மரணங்களை பார்க்கிறோம்? எனவே நான் அப்பிரச்சினையில் மீண்டும் மீண்டும் வேலை செய்ய வேண்டும். அது தொடர்பான

விஷயங்களை புதிய கண்ணோட்டங்களில் காட்ட வேண்டும். அவை ஏற்கனவே பார்த்த படங்களாக இருந்தாலும் கூட, மாற்றத்திற்கான வாய்ப்பு கிடைக்கும் வரை நான் அதை மீண்டும் மீண்டும் காண்பிப்பேன். இது தொடர்ந்து கொண்டிருக்கும் சண்டை. இதை எதிர்த்து சாலைகளில் போராடுகிறார்கள். நீதிமன்றங்களில் போராடுகிறார்கள். என்னுடைய கலை வடிவத்தை கொண்டு நானும் போராடுகிறேன். செல்வா அண்ணாவின் வார்த்தைகளில் சொல்வதெனில், மலக்குழியில் இறங்கும் தூய்மைப் பணியாளர் பணியை எதிர்த்து களத்தில் போராடுபவர்களுக்கு நான் கொடுக்கும் ஆதரவு இது. பிரச்சினைகளை மக்களிடம் கொண்டு செல்லும் நான்காவது தூண் போல.

11. உங்கள் படைப்புகளை வெளிக்கொணர எவ்வளவு முயற்சி செய்கிறீர்கள்? (இது உங்களுக்கு முக்கியமா? அப்படியானால், ஏன்?)

எந்தவொரு புகைப்படக் கலைஞருக்கும் கண்காட்சி ஒரு முக்கியமான விஷயமாகும். தங்கள் படைப்புகளை வெளிப்படுத்துவதற்கான முயற்சிகள் போதுமானது. எங்கள் வேலைகளின் வழியே நாங்கள் மக்களிடையே ஓர் உரையாடலை உருவாக்கியுள்ளோம். ஆனால் அதை விட முக்கியமாக துறை சார்ந்த விமர்சனங்கள் வளர இடம் உருவாக்க வேண்டும். கண்காட்சியின் இத்தகைய விதி, நாட்டின் அல்லது உலகின் பல்வேறு பகுதிகளுக்கு தங்கள் படைப்புகளை ஒருவர் எடுத்துச் செல்லவும் இன்னும் அதிக தாக்கத்தை ஏற்படுத்தவும் உதவும். உதாரணமாக கூடங்குளம் பிரச்சினையை பேசும் ஒரு படைப்பை எடுத்துக் கொள்வோம். பல்வேறு பகுதிகளில் அந்த படைப்பு காட்சிப்படுத்தப்படும் போது அது தொடங்கிய இடம் மட்டுமின்றி அனைவரின் சுற்றுச்சூழல் பிரச்சினையாகவும் மாறும் வாய்ப்பு உருவாகும். படைப்புகளை காட்சிப்படுத்துவதில் கவனச்சிதறலுக்கான வாய்ப்புகள் இல்லை. எந்தவொரு புகைப்படக் கலைஞரையும் அவர்களின் வாழ்க்கையில் அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்லும் ஒரு செயல்முறை மட்டுமே இது. ஒவ்வொரு புகைப்படக் கலைஞரும் தங்கள் பணியை வெளிப்படுத்த ஒரு வாய்ப்பைத் தேடுகிறார்கள். நான் எப்போதுமே என் மாணவர்களை - அவர்கள் எந்த புகைப்படம் எடுத்தாலும் - அதை காட்சிப்படுத்தும்படி கேட்பேன். படைப்பு சொல்லிக் கொள்ளும் அளவில் இல்லாவிட்டாலும் அது அவர்களுக்கு மேலும் பல விஷயங்களை கற்றுக்கொள்ள உதவும். எனக்கும் அதுதான். எனது முதல் கண்காட்சிக்குப் பிறகு நான் புதிதாகத் தொடங்கினேன். "இது என்னுடைய சிறந்த படைப்பல்ல. என்னுடைய சிறந்த படைப்பு இன்னும் வரவில்லை, " என எனக்கு நானே சொல்லிக் கொள்வேன்.

இன்றும் அதை எனக்கு நானே சொல்லிக்கொண்டு இருக்கிறேன். "என் சிறந்த படைப்பு இன்னும் வரவில்லை."

12. உங்கள் சொந்த நாட்டில் உங்கள் படைப்புகளை பகிர / காட்ட போதுமான வாய்ப்புகள் மற்றும் வழிகள் இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா? அல்லது வெளிநாடுகளில் இதுபோன்ற வாய்ப்புகளை நீங்கள் எப்போதும் தேடுகிறீர்களா?

ஆரம்ப காலத்தில் எந்த வாய்ப்பையும் உருவாக்குவது கடினமாக இருந்தது. உங்கள் புகைப்படங்களில் ஒன்றை கூட வெளியிடுவது மிகவும் கடினமாக இருந்தது. மேலும் ஒரு படைப்புக்கு பிறகு வாய்ப்புகளை உருவாக்குவது சாத்தியமில்லை. படைப்பு வேலையின் தொடர்ச்சி மட்டுமே வாய்ப்புகளைத் தரும். எனது படைப்பு வெளியிடப்பட்டதோ அல்லது என் படைப்பை பற்றி 'கேரவனில்' வெளியான கட்டுரையோ நெதர்லாந்து இதழின் பணியோ எல்லாமுமே எனது தொடர்ச்சியான பணிகளின் காரணமாகதான் சாத்தியமானது. என் படைப்புகளில் மாறுபாடுகளை காண்பிப்பதும் எனக்கு உதவியது. ஒரு பிரச்சினையை மட்டும் ஒருவர் தொடர்ந்து படம்பிடிக்க முடியாது என்று நினைக்கிறேன். அப்படி செய்தால் அது புகைப்படக் கலையாக இல்லாமல் சமூக செயற்பாடு என்றாகிவிடும். எனவே படைப்புகளில் உள்ள மாறுபாடுகள் புதிய வாய்ப்புகளைக் கொண்டுவரும். மேலும் என் படைப்புகளை பதிப்பிக்கவும் கண்காட்சிகளில் வைக்கவும் தேவையான வழிகள் எனக்கு இங்கு இருக்கின்றன. இதே நிலை வெளிநாடுகளை பொறுத்தவரை எனக்கு கிடையாது. காரணம், பொருளாதாரம். தொடக்கத்தில் அச்சு போடவும் சட்டகங்களுக்கும் செலவு செய்ய பணம் இல்லை. மிகவும் கஷ்டப்பட்டேன். புகைப்படங்களை மட்டும் அச்சிடுவேன். பொருட்களை வாங்குவதும் மெருகேற்றுவதும் நானே செய்து கொண்டேன். சட்டகம் கூட நான் செய்து கொண்டேன். கண்காட்சி நடத்த பொருளாதார சிக்கலை எதிர்கொண்டேன். ஒரு முறை என் தாய்க்கு உடல்நிலை சரியில்லாமல் போனது. அவரை உடனடியாக மருத்துவமனையில் சேர்க்க என்னிடமோ என் தந்தையிடமோ போதுமான பணம் இல்லை. வளரும் புகைப்படக் கலைஞராக இருந்த நான் எப்போதும் அம்மா உணவகத்தைதான் நம்பியிருந்தேன். அம்மா உணவகமும் அங்கு மலிவு விலையில் கிடைக்கும் தரமான உணவும் இங்குள்ள பல கலைஞர்கள் உயிர்வாழ காரணமாக இருந்தது என்பதை என்னால் உறுதியாக சொல்ல முடியும். எனது தொடர்ச்சியான பணியால் எனக்கு இங்கு வாய்ப்புகள் உருவாகியிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. ஆனால் வெளிநாடுகளில் அத்தகைய வாய்ப்புகள் ஏற்படுவது இன்னும் தொலைதூர கனவாகவே இருக்கிறது.

13. நுண்கலை அல்லது ஆவணப்புகைப்படம் எடுப்பது எப்பொழுதும் வாழ்க்கைக்கு தேவையான வருமானத்தை அளிப்பதில்லை என்பதை நாம் அறிவோம். சிலர் வணிக வேலை செய்கிறார்கள். மற்றவர்கள் கற்பிக்கிறார்கள். உங்களின் வாழ்வாதாரத்துக்கு என புகைப்படத்துறையில் வேறு ஏதும் பணிகள் செய்கிறீர்களா? ஆர்வமுள்ள புகைப்படக் கலைஞர்களைளுக்கு நீங்கள் பரிந்துரைக்கும் விஷயங்கள் என்ன?

ஒருவரின் பணி சமூக நலனுக்காக இருக்கும்போது, பொருளாதார சிக்கல்கள் அப்பணியின் ஒரு பகுதியாகும். ஆனால் உயிர்வாழ்வதற்கு ஒருவர் பிற வழிகளையும் கண்டுபிடிக்க வேண்டும். என் விஷயத்தில் நான் திருமணம் மற்றும் பிற குடும்ப நிகழ்வுகளில் சென்று புகைப்படம் எடுப்பேன். ஆரம்பத்தில் இதை செய்யவில்லை. நான் ஆவணப்படுத்தும் வாழ்க்கைகளை போன்ற வாழ்க்கையைதான் நான் முன்பு வாழ்ந்தேன். அவர்களை ஆவணப்படுத்த செல்லும்போது என்னிடம் பணம் இருக்காது. திரும்பி வர எனக்கு அவர்கள் உதவுவார்கள். இது அவர்களுடன் தொடர்பு கொள்ளும் மற்றொரு நிலை. உங்களின் நேர்மையான பணி உங்களுக்கு தேவையானவற்றை வழங்கும் என நான் எப்போதும் நம்புகிறேன். எப்போதும். ஒரு சமயம் என்னிடம் சாப்பிடக் கூட பணம் இல்லை. அப்போது எனக்கு ஓர் அழைப்பு வந்தது. எனது நண்பர் ஒருவர் நான் முன்பு எடுத்த புகைப்படத்தை கேட்டு அழைத்து அதற்கு பணமும் கொடுத்தார். எனவே வேலை உங்களை ஒருபோதும் ஏமாற்றாது. நான் அதை கைவிடாததால் அதுவும் என்னை கைவிடவில்லை. நம் பணி மக்களுக்காக பேசும்போது அவர்கள் ஒருபோதும் நம்மை கைவிட மாட்டார்கள்.

14. கடந்த சில வருடங்களாக டிஜிட்டல் தொழில்நுட்பம் புகைப்படக் கலையை கடுமையாக மாற்றியுள்ளது. மாற்றங்கள் இக்கலைக்கு நல்லது என்று நீங்கள் நம்புகிறீர்களா இல்லையா? ஏன்?

மேம்பாடு என்பது வளர்ச்சியின் ஒரு பகுதியாகும். என்னால் இப்போது படச்சுருள் புகைப்படம் எடுக்க முடியாது. அது அதிக விலையாகி விட்டது. ஆனால் டிஜிட்டலின் தற்போதைய போக்கில் அதன் விலை மலிவாக இருக்கிறது. எனவே தொழில்நுட்பத்தில் மேம்படுவதை ஒருவரின் தனி விருப்பத்தால் புறக்கணித்துவிட முடியாது. எந்த ஊடமாக இருந்தாலும் என்னுடைய கவலை, இந்த மாற்றம் யாருக்கு சாதகமானது என்பதை பற்றி மட்டும்தான். எனது முழுப் பணியுமே கூட அந்த கேள்வியை அடிப்படையாகக் கொண்டதுதான். டிஜிட்டல் முறை இப்போது அனைவராலும் அணுக முடிகிற முறையாக இருக்கிறது. நிகழ்வுகளை ஆவணப்படுத்தவும், உடனடியாக அவற்றை சமூக தளங்களில் பதிவேற்றவும் ஒரு

மொபைல் போன் சிறப்பாக பயன்படுகிறது. கடந்த காலங்களிலும் சாதி வன்முறை நிகழ்வுகள் நடந்தன. அந்த நாட்களில் அது முக்கிய செய்திகளை எட்டாது. ஆனால் இப்போதெல்லாம் மக்கள் அதை பதிவு செய்து உடனே வெளிப்படுத்தி விடுகிறார்கள். இதை ஒரு மதிப்புமிக்க மாற்றமாக நான் பார்க்கிறேன். நன்மை தீமைகள் இதிலும் இருக்கின்றன. ஆனால் இன்னும் முக்கியமானது இந்த மாற்றத்தை அந்தந்த ஊடகங்களில் யார் நிகழ்த்துகிறார்கள் என்பதுதான்.